உ

கடவுள் துணை

கூடலூரைச்சேர்ந்த அணுக்கப்பட்டு

செடல் முத்தாலு அம்மன்

சிறப்பு.

MADRAS.

சிதம்பரம் அப்பாசாமிப் பிள்ளை குமாரர்

நாகரெத்தினம்பிள்ளையவர்களால்

இயற்றப்பட்டு

சிதம்பரம்

ஸ்ரீ குஞ்சிதசரணபிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1—8—1914] [இதன்விலைபைசா 6.

செடல் முத்தாலு அம்மன் சிறப்பு.

விநாயகர்துதி.

ஆசையாகி வந்தேன் என்றவர்னமெட்டு.

1. வேழமாமுகனேஉன்னை வேண்டினேன்வாராய்
ஆழிதரித்தோன்மருகா அருளைநீதாராய்
2. மூழிகவாகனமேரி மூர்த்தியேவாராய்
ஏழை உன்னைகரங்குவித்து ஏற்றினேன்தாராய்
3. வர்மமெந்தன்மீதினில் வைபாமலேவாராய்
தர்மமிது அல்லஉந்தன் தாளடிதாராய்
4. மாலயனுக்கெட்டாயீசன் மகனேநீ வாராய்
பாலன் நாகரெத்தினம் பணிந்தேன் வரந்தாராய்

ஏழைமுகம் என்றவர்னமெட்டு.

எந்தனை வந்தாளுமையனே முருகையனே (எ)
வந்தென்னையாள்பரனே வள்ளிமனோகரனே
வந்தனம் செய்கின்றேன் நானே முருகையனே (எ)
உன்னையேதுணை என்றேன் உறுதியாய் நம்பிநின்றேன்
என்னை நீ காத்திடுவாயே முருகையனே (எ)
புள்ளிமயிலேரி நேராய் பொன்னடிதரவாராய்
தள்ளிவிடாமலேகாராய் முருகையனே (எ)
சந்ததம் நாகரெத்தினம் சிந்தைநோய் தீர்க்கதினம்
வந்து நீ சார்ப்பாயே இங்ஙனம் முருகையனே (எ)

கமல வாசனி யென்றவர்ன மெட்டு

1. வாணிசரஸ்வதி வந்தனம் பாணி
வேணிஉந்தனை வேண்டினேன் பிர்ம்மன் காணி
2. கல்விக்கரசியே காரும் நாரணி
கல்லோ உன்மனம் கரையாதோ பூரணி
3. செந்தாமரை வாழ் செல்வி வாரணி
சந்ததமுனை சாற்றினேன் காரணி
4. நாகரெத்தினம் நற்றமிழ்க்கல் யாணி
அகமகிழ்ந்துமேவரம் அருளுவாய் வேணி

மாதரசே என்ற வர்னமெட்டு

1. அன்னமே அணுக்ககர் அம்மன் செடல் மாரியரை
அன்புடன் போய் தெரிசித்து வருவோம் இன்று
துன்பத்தைப் போக்கி அருளைப் பெருவோம்

3. இன்னமும் தடையென்னடி கன்னியே வருவாயோடி
இக்ஷணம் போய் அம்மனை நாம்கண்டு மாதே
பக்ஷமாய் புரியலாமே தொண்டு

3. கோமளமே மாரியற்கு தாமதமின்றிக் காணிக்கை
கொண்டு நீ வருவாயடி மானே பல
செண்டு புஷ்பங்களை சூடித்தானே

4. மாமயிலே ரோஜாவுடன் சாமந்தி மனோரஞ்சிதம்
மல்லிகை முல்லை மலரை சாற்றி அந்த
செல்வி முத்தாலம்மனைப் போற்றி

5. வஞ்சியே பணிந்திடுவோம் கொஞ்சியே எந்தன் பின் வர
வர்மமுனக் கென்னடியிப்போது செய்த
கர்மம் விலகுமடி தப்பாது

6. அன்னமே அய்யனர் கோவில் சொர்னமே கரம் குவித்து
ஆரிழையே பணிந்திட்டோம் வாடி சுத்த
வீரனை துதித்து புகழ் பாடி

7. வேலவர் தனக்கு மூத்தவேடன் பிள்ளையார்சன்னதி
வேண்டி நீ பணிந்திடுவாய் மாதே இவர்
அண்டினோரை ஆள்வார் புவிமீதே

8. பாலாமானென் பதின் சிரு ஜலம் போகிற தோர் நேரு
பாவையரே வேகமாக வாராய் இதோ
வாணுவன் சத்திரமிதை பாருய்

9. கோதையே ரயில்வேஸ் டேசன் மாதரசே வந்தோமடி
குஞ்சிதமே வேடிக்கைகள்பாரு அடி
வஞ்சியேயிவ்விடம் நீ உட்காரு

ஆசைகிளியே என்ற வர்ன மெட்டு.

1. மானேயிப்போது வண்டி வருகிறது
மங்கையே பிளாட்பாரந் தானே
தேனே நீ வருவாய் டிக்கெட்டை வாங்கினேன்
தேவியரே ரெயிலேரத்தானே

செடல் முத்தாலு அம்மன் சிறப்பு

2. அன்னமே பட்கிளாஸ் வண்டியும் நேரடி
அஞ்சுகமே யேரிஉட்காரடி
உன்னதமாகவேவண்டியும் போகுது
உத்தமியே யிதன் வேகம்பாரடி
3. செல்வியே இப்போது சிதம்பரம் கடந்தோம்
ஸ்ரீ மாரியை நாம் மனதில்நாடி
மெல்லியே பாலமான் கெருடரிதுபார்
மேவியதன் மேல்ரயில் போகுதடி
4. தேவியே காளியம்மன் கோவில்பாரடி
தெரிவையரே கைபணிவாயின்று
பாவையரே கந்தமங்கலம் கேட்டு
பைங்கிளியேயிது மிக்கநன்று
5. மங்கையேபாரடி கோவிலாம் பேட்டை
மாமயிலே மனக்கிலேசம் தீரு
பொங்கமுடனே நாம் இள்ளையைகடந்தோம்
பூவையரே வெள்ளாரைப்பாரு
6. பங்கிளியே பரங்கிப்பேட்டையிது
பாவையரே பக்ஷணம் வாங்குவேனே
மங்கையே பசிதனையாறினோம்
மாதே புதுச்சத்திரம் பாராய் தேனே
7. சித்தினியாளே சிதம்பரந்தனில் வாழ்
சிறுவன் நாகரெத்தினமே
சித்தம் பொருந்தியே முத்தாலம்மனடி
நித்தமும் வணங்கினேன் மோகனமே.

தெம்மாங்கு.

1. வந்தோம் புதுச்சத்திரம் வர்னக்கிளி மாமொழியே
பந்தியாய் செவ்வாய்க்கிழமை சந்தையென்று பலசனங்கள்
கூடுவார்மானே—வெகு
வேடிக்கையாய்தானே
2. பச்சையப்பன் சத்திரம் பார்த்து வருவாயேபெண்ணே
இக்ஷணம் காயல்பட்டு இதோதெரியுது கண்ணே
பசுங்கிளியாளே—இன்னம்
பாவையரே கேளே

3. பரவனார் தன்னைப்பாரு பாவையரே ஜலத்தின் ஜோரு
விரைவினில் வந்தோமடி வேடிக்கையாய் ஆலப்பாக்கம்
இரங்குவாயே பெண்ணே—இந்த டேசனில் நீகண்ணே

4. பாரடிமானிடர்கள் பக்ஷமுடன் யாவர்களும்
மாரிதரிசனங்காண மங்கையரே வருகின்றாரே
பத்தினியேதங்கு பசி—தணிவோம் இங்கு

5. கோதையரேபசிதணிந்தோம் கோமளமே வருவாய் [illegible]
பாதை வழி தன்னை நாடி பைங்கிளியேவருவாயோடி
செப்புகிறேன் பாரு—அடி செல்வியே வழி நேரு

6. சத்தியாம் மாரிதனை சரசியே நினைந்துவாராய்
நித்தியம் வரத்தைத்தந்து நேரும் வினைதீர்த்திடுவாள்
சொல்லுகிறேன் நாடிஅடி— மெல்லியரேவாடி.

7. மெள்ளாடக்கலாமே மேவியிங்கு மாதரசே
குள்ளஞ்சாவடி ரோட்டின் மேல்குஞ்சிதமேதிரும்புவாயே
செல்வியே கண்ணேக்கு சென்— நெல்விளையும்காக்கு

8. எள்ளுக்கால்வாய்க்கால்வந்தோம்ஏந்திழையேஇங்குநின்றால்
கள்ளரடிப்பாரடி காதலியே போகலாமே
ஏந்திழையே பாரு—இராம நாதங்குப்பம் நேரு

9. தாசன்நாகரத்தினம் பதம் தையலரே கேட்டிப்போது
பாசமாய் வருவாயோடி பைங்கிளியே மனமகிழ்ந்து.
ஜனம் போகிறார் திரண்டு—நீ ஏன்டிநிக்கிறாய் மிரண்டு

வேறு.

பாவையரே அணுக்கப்பட்டு பக்ஷமுடன் வந்தோமடி
ஆவலுடன் முத்தாலம்மனடியிணை தெரிசிப்போம் ஓடி

கோதையரே நிற்குதுபார் குதிரைகளிருபக்கமும்
மாதே நீ பயப்படாதே மகமாரிகோவில்வந்தோம்

கணேசர் சந்நதிபாராய் கண்மணியே பணிந்து வாராய்
குணமருள் செய்யும் பரன் அணங்கும் வினைதீர்த்திடுவார்

ஆரிழையே முத்தாலு அம்மனிட ஸன்னதியில்
பாரடிகொடிமரம் நேராய் தெரியுதிதோ

செடல் முத்தாலு அம்மன் சிறப்பு.

பாவங்கள்தனை தீர்க்கும் பாவாணை ராயன்துரை
தேவியே நீ கும்பிடுவாய் தேவன் பதத்தை நாடி

வெப்பைக்கண்ணோய் சூனியம் வெதுப்பையெனும் நோயும்
இப்புவியில் மானிடர்க்கு ஏற்றிடுமே கண்டிடிலோ

ஜெகதீஸ்வரியே நாம் செடல்குத்திவாரே னென்றால்
மகமாரி அவ்வினையை மாயமதாய் போக்கிடுவாள்

கன்னியரே தெரிசிப்பாய் அன்னை செடல் மாரியரை
உன்னிதமாய் செடல்யினி உத்தமியே போடுவாரே

ஊசிதனையெடுத்து நேசியரே சில ஜனங்கள்
கூசாமல் பக்கசெடல் குத்துகின்றார் பயப்படாதே

பக்கச்செடல் தனை போட்டு பசுங்கிளியே தேரிழுத்து
முக்கியமாய் முத்தாலம்மன் கோவில்வலம் ஓடிவாரார்

ஆடுமாடுகள் முதல் அரிவையரே யாவற்றிக்கும்
நாடியே மானிடர்கள் நலமுடன் செடல் போடுகிறார்

புருவமுதற் நாவினிலும் பூவையரே ஊசியினால்
மாரிதனை நம்பியல்லோ மஹாசெடல் குத்துகிறார்

கும்மி

1. கும்மியடிப் பெண்கள் கும்மியடி கரங்
குவித்துக் கும்மியடியுங்கடி
நம்மையனுதினம் ஆளும்மாரியை
நாடிக்கும்மி யடியுங்கடி.

2. ஆரிழையாளே அணுக்கநகரில்வாழ்
அம்மன் செடல் மாரிதன்பெருமை
பாரினிலேயதை நேரிழையேசொல்ல
பத்தினியே முடியாதருமை

3. மானிலம்தன்னிலே மானிடர்களுக்கு
மண்டைகுடைச்ச லுடன்சுரமும்
சூனியம்பற்பல நோய்கண்டால்
செடல்குத்துகிறேனென்றால் வரமும்

4. மாதரசே தந்து பாதுகாத்திடுவாள்
மாடுகள் ஆடுகள் யாவற்றையும்
காதலியே நீங்கள் மாரி பெருமையை
கன்னியே பாடியடியுங்கடி.

5. சித்தினியாளே கடைத்தெருவிற்கு நாம்
சென் அவருகலாம் சேயிழையே
பத்தினி பெயிந்து ஷாப்புகள் வினோதம்
பகரவொண்ணாதென்று பாடுங்கடி.

6. பெத்திசையோர்களும் நத்தி துதிக்கின்ற
எந்திழைமாரி தனக்காக
வெத்திலைபாக்கு தேங்காய்பழத்துடன்
வைத்துபடைத்திட வாங்கிடடி.

7. பட்டாணிகடையுடன் மிட்டாய்கடைகளும்
பற்பலவினோதம் என்னசொல்வேன்
சட்டிப்பானைகளும் சவுளிக்கடைகளும்
சரசியே விற்குது பாருங்கடி.

8. இத்ததியிலிங்கு புத்தகக்கடைகளும்
எந்திழையே செப்பவொண்ணாது
இத்தரைதன்னிலே பத்தர்கள் துதிக்கும்
ஈஸ்வரியைபாட வாருங்கடி.

9. சீரியே போகுது ஆகாயவாணங்கள்
செப்பமுடியாது பத்தினியே
மாரிபெருமையை என்னென்றுசொல்லுவேன்
மங்கையரே கூடி யடியுங்கடி.

10. சல்லடைவாணங்கள் மெல்லியரே யிங்கு
சத்த அவுட்டு வெடிகளுடன்
சொல்லமுடியாது மத்தாப்பின் சொலிப்பு
சுந்தரியே பாருங்கடி.

11. தில்லை தலம்வாழ் நாகரெத்தினம்
தேன்மொழியே யிதை பாடிவைத்தேன்
எல்லவர் போற்றிடும் முத்தாலம்மன் பாதம்
எற்றிக்கும்மி யடியுங்கடி.

வாழி விருத்தம்.

உத்தமியாள் முத்தாலு அம்மன் வாழி வாழி
உகந்த கவிவாணர்களும் வாழி வாழி
இத்தரையில் இதையெழுதிவைத்தோர் வாழி வாழி
இன்பமுடனிதை படிப்போர் வாழி வாழி
சித்தமகிலன்பாக கேட்போர் வாழி வாழி
ஜெகத்திலுள்ள யாவர்களும் வாழி வாழி
நித்தியமும் இச்சிந்து வாழி வாழி
நீடூழி ஸ்ரீ குஞ்சிதசரணம் பிரஸ் வாழி வாழி.

செடல் முத்தாலம்மன் சிறப்பு
முற்றிற்று.

17447
600 008

விளம்பரம்.

சிநேகமுள்ள கனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் சி. அ. நாகரெத்தினம் பிள்ளையவர்களால் கூடலூரைச்சேர்ந்த அனுக்கப்பட்டில் முத்துப்பல்லக்கு வாடகைக்கு விடப்படும். ட்ராமாசயிட்டிங்கி படுதா வேண்டுமானால் முன்பணம் கட்டினால் எழுதிக்கொடுக்கப்படும்.

எனது விலாசம்:—

அனுக்கப்பட்டு
குள்ளஞ்சாவடி போஸ்டு
கடலூர் மார்க்கம்
சி. அ. நாகரெத்தினம்பிள்ளை.